பக்கங்கள் 21+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 18 வியாழக்கிழமை 01.05.2025 | அதிர்வு 271

## யாழில் அதீத வெப்பத்தால் மேலும் ஒருவர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பமான காலநிலையால் நேற்று புதன்கிழமை வீதியில் பயணித்துக் கொண்டிருந்தவர் திடீரென மயங்கி

05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### காணி சுவீகரிக்கும் வர்த்தமானியை வாபஸ் பெறாவிட்டால்

# யாழில் அநுர கால் பதிக்க இடமளியோம்



## மே தினக் கூட்டத்தில் சுமந்திரன் சூளுரை

எஸ்.நிதர்ஷன்

“வடக்கில் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானியை அநுர அரசு உடனடியாக வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபதி யாழ். மண்ணுக்கு வர முடியாமல் அல்லது கால் வைக்க முடியாமல் செய்வோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் இன்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

05▶

# யாழில் இராணுவத்தின் பிடியில் இருந்த 40.7 ஏக்கர் காணிகள் இன்று விடுவிப்பு!

(விரிவான செய்தி 4ஆம் பக்கம்)








# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழரசின் மே தினக் கூட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.

கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி. கே.சிவஞானம் தலைமையில் இந்த மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்தக் கூட்டம் தொடர்ந்து கட்சியின் முக்கியஸ்தர்களின் உரைகளுடன் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவடைந்தது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# யாழில் கூட்டு மே தினப் பேரணி

**(எஸ்.நிதர்ஷன்)**

தொழிற்சங்கங்கள், வெகுஜன மற்றும் சிவில் அமைப்புகளுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் இணைந்து நடத்திய கூட்டு மே தினப் பேரணி இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

முற்பகல் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமான பேரணி நகர் பகுதி ஊடாகப் பயணித்து யாழ். பொது நூலகம் முன்பாக நிறைவு பெற்றது.

இந்தப் பேரணியில், "தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி", "அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்கு", "மலையகத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்கு!", "கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு", "விவசாயிகள் எதிர்நோக்கும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு" உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.


















# யாழில் இராணுவத்தின் பிடியில் இருந்த 40.7 ஏக்கர் காணிகள் இன்று விடுவிப்பு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்து வந்த ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்காக இன்று ஒப்படைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மானத ஜெகம்பத்தால் யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபனிடம் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் இன்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பதில் செயலர் கூறுகையில்,

“வலிகாமம் வடக்கு, வயாவிளானில் 20 ஏக்கர் காணிகளும், மாங்கொல்லை பகுதியில் 15 ஏக்கர் காணிகளும், வடமராட்சி – கற்கோவளம் பகுதியில் 5.7 ஏக்கர் காணிகளுமாக சுமார் 40.7 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து தெல்லிப்பளை ஜே/233 பகுதியில் 47 குடும்பங்களும், வயாவிளான் பகுதியில் 55 குடும்பங்களும் தமது பூர்வீக நிலங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இதேவேளை, குறித்த காணிகளில் வெடிபொருட்கள் அபாயம் தொடர்பில் ஆராய்வு செய்யப்பட்டு அதன் பின்னர் மக்கள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இதேவேளை, மேலும் சில காணிகளும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளன.” – என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திருமதி. சி.சுதீஸ்னர், பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## யாழில் அநுர...

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தொழிலாளர்களுக்காக அன்று முதல் இன்று வரை இந்த நாட்டில் செயற்படுகின்ற ஒரே கட்சி தமிழரசுக் கட்சிதான். தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நம்பிக்கையைப் பெற்ற பிரதான கட்சியும் எமது கட்சிதான்.

இப்படியாக உழைக்கும் தொழிலாளர்களுக்காகவும் மக்களுக்காகவும் நாம் எப்போதும் உண்மையாகக் குரல் கொடுத்து வருகின்ற நிலையில் ஆட்சியில் உள்ள அநுரகுமார தரப்பினர் தொடர்ச்சியாகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இவ்வாறு கடந்த காலங்களில் ஏமாற்றியவர்களுக்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷ 51 வீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாகிய போதும் அதே மக்களால் துரத்தியடிக்கப்பட்டதைப் பார்த்திருந்தோம்.

சிங்கள மக்களாலேதான் நான் வந்தேன் வந்தேன் எனக் கூறிக் கொண்டிருந்த கோட்டாவுக்கே இதே கதி என்றால் கேவலம் வெறுமனே 42 வீத வாக்குகளுடன் வந்த அநுரகுமாரவுக்கு என்ன நடக்குமோ தெரியாது.

ஆகவே, பொய்யான வாக்குறுதி வழங்கி மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நீங்கள் நிறைவேற்றாமல் உள்ளீர்கள். ஆக மொத்தத்தில் பொய்யான வாக்குறுதிகளையே வழங்கியுள்ளீர்கள்.

எனவே, உங்கள் வழியை நீங்கள் சரி பண்ணாவிட்டால் உங்களுக்கும் இதுதான் நடக்கலாம். பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றாதீர்கள்.

குறிப்பாக நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளில் மக்களின் காணிகள் மக்களிடமே வழங்கப்படும் என்று கூறியிருந்தீர்கள். படையினர் வசமுள்ள மக்கள் காணியை விரைவில் விடுவிப்போம் என்றும் கூறியிருந்தீர்கள்.

ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அதற்கு மாறாக காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையில் தற்போது இறங்கியுள்ளீர்கள். உங்களுடைய இந்தச் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

உங்களது வாக்குறுதிக்கு மாறாக வடக்கில் காணிகளைச் சுவீகரிப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள். குறிப்பாக காணி சுவீகரிக்கும் வர்த்தமானியை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் யாழ். மண்ணுக்கு வர முடியாமல் அல்லது கால் வைக்க முடியாமல் செய்வோம்.

எங்களை ஏமாளிகள் எனக் கருத வேண்டாம். ஏமாற்றுவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. அதற்கு எதிரான நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயம் எடுப்போம்.

மேலும், இன்றைய மே நாளில் நாம் சில தீர்மானங்களையும் எடுத்துள்ளோம். குறிப்பாக இராணுவக் கையிருப்பில் உள்ள எமது மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும், விலைவாசி உயர்வைக் குறைக்க வேண்டும், தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

இன்றைக்கு நாட்டில் நாளாந்தம் விலைவாசி அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அதிலும் தேர்தல் வரும் போது குறைப்பது மாதிரி குறைத்துக் கொண்டாலும் மறுபக்கம் விலைவாசி அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

குறிப்பாக சீனியை விட உப்பின் விலை அதிகரித்துள்ளது. அதிலும் ரஜலுனு என உப்புக்கு ஒரு புதிய பெயரை வைத்தவர்கள். அதைப் பற்றிக் கேட்டால் பெயரைப் பார்க்காதீர்கள், ருசியைப் பாருங்கள் எனச் சொல்கின்றார்கள்.

தமிழ்ப் பெயரை சிங்களப் பெயராக அவர்கள் மாற்றுவார்களாம். அதைப் பற்றி கேட்டால் சம்பந்தம் இல்லாமல் பேசுகின்றார்கள். ஆக தமிழ்ப் பெயரை அவர்கள் இங்கு மாற்றலாம். தாங்கள் தமிழ்ப் பெயரை வைக்கத் தயாரில்லை.

இவ்வாறானவர்கள்தான் எங்களுக்கு வந்து உபதேசம் செய்கின்றார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களிலேயே இதெல்லாம் நடக்கின்றதென்றால் இனி என்ன என்ன எல்லாம் நடக்கப் போகின்றதோ என்று பார்க்கலாம்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் தங்களது அடிப்படைக் கொள்கைக்கு மாறானது எனக் கூறி அதற்கு எதிராக நீதிமன்றம் வரை சென்றவர்கள் இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தில் எதனையும் மாற்றாது அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்படுகின்றனர்.

கடன் மறுசீரமைப்பு செய்கின்ற போது தொழிலாளர் வர்க்கத்துக்குச் செய்யும் துரோகம் என்று சொன்னவர்கள் அதனையே இன்று பெருமையாகப் பேசி வருகின்ற நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.

தங்களை இடதுசாரிகள் எனக் காட்டிக்கொண்டு மோசமான ஆட்சி செய்பவர்கள்தான் இந்த அநுரகுமார ஆட்சியாளர்கள்.

உங்களது தலைவர் ரோகண விஜயவீர தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்று கூறியிருக்கின்றார் என்றால் நீங்களும் உண்மையான இடதுசாரிகள் என்றால் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு எனச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் சிவப்புச் சட்டை அணிவதில் அர்த்தம் இல்லை.

தொழிலாளர்களுக்கு நன்மை அளிப்பதாகக் கூறிக் கண்டு முதலாளித்துவக் கொள்கையில் பயணித்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு எப்படி நன்மையளிக்க முடியும்? எனவே, முதலாளித்துவக் கொள்கையை விட்டு விலகி உங்களது பழைய ஆரம்பத்துக்கு வாருங்கள்.

லெலினிசக் கோட்பாட்டுக்கு வாருங்கள், சம்பள உயர்வு கொடுங்கள், அப்படியாக உங்களால் திரும்பி வர முடியாவிட்டால் மக்களிடம் செல்ல முடியாத நிலை உங்களுக்கு விரைவில் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படுகின்ற மக்களுக்கும் குரல் கொடுக்கும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சிதான்." – என்றார்.

---

## யாழில் அதீத...

வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி கலியுகவரதன் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மதிய நேரம் வீதியில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மயங்கி வீழ்ந்துள்ளார். அவரை வீதியால் சென்றவர்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

மரண விசாரணையின்போது, வெப்பத்தால் ஏற்பட்ட பாதிப்பால் மயக்கம் ஏற்பட்ட நிலையில் மரணம் சம்பவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் காலை உணவை அருந்தாது, வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றார் என்று வீட்டார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்த திங்கட்கிழமை இணுவில் பகுதியில் உள்ள தோட்ட வெளியில் பயணித்துக்கொண்டிருந்தவர் வெப்பத்தால் ஏற்பட்ட பாதிப்பால் மயங்கி வீழ்ந்து உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கணக்காளர் சேவை விசேட தரத்துக்கு 13 பேர் பதவி உயர்வு

## மூவர் மாத்திரம் தமிழர்கள்

(ந.லோகதயாளன்)

கணக்காளர் தரம் 1ஐச் சேர்ந்த 13 கணக்காளர்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவால் கணக்காளர் சேவை விசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

2025.01.01 முதல் இந்தத் தர உயர்வு அமுலாகும் என 2025.04.28 ஆம் திகதிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கணக்காளர் சேவை விசேட தரத்துக்குத் தேர்வான 13 கணக்காளர்களில் மூவர் தமிழர்களாகவும், எஞ்சியோர் சிங்களவர்களாவும் காணப்படுகின்றனர்.

பதவி உயர்வு பெறுவோர் பட்டியலில் எஸ்.சுரேஜினி, எஸ்.ஆர். சிவரூபன் மற்றும் கே.கமலரூபன் ஆகியோரின் பெயர்கள் காணப்படுகின்றன.




# மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் போதும்

## யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி

"“அன்பான வாக்காளர்களே! மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் போதும். இனிமேலாவது பொறுப்புடன் வாக்களிப்போம்.”

– இவ்வாறு குறிப்பிடப்பட்டு “யாழ்ப்பாணம் கல்விச் சமூகம்“ என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பலரும் பல்வேறு சந்தேகங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.



# வடமாகாண தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினப் பேரணி!

(எஸ். நிதர்ஷன்)

வட மாகண தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பேரணி ஒன்று யாழில் நடைபெற்றது.

மே தினத்தில் பல்வேறு தொழில் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் பேரணிகள் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் தொழிற் சங்கங்கள் இணைந்து இந்தப் பேரணியை நடத்தியிருந்தன.

இதற்கமைய நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமான மே தின மோட்டார் சைக்கிள் பேரணியானது ஆரியகுளம் சந்தி – ஸ்ரான்லி வீதியூடாக யாழ். நகரை அடைந்து யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நிறைவடைந்தது.

# காணி விடுவிப்பு என்.பி.பியின் வாக்குகள் சூறையாடும் வியூகம்

## தொழிலதிபர் சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழு சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

காணி விடுவிப்பு என்பது தமிழ் மக்களின் வாக்குகள் சூறையாடு வதற்கான வியூகமே தவிர, அது ஒரு மக்கள் நலன் சார் விடயம் அல்ல என்று இளம் தொழிலதிபர் சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழு தெரி வித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இன்று (01) தொழிலதிபர் சுலக்சன் மற்றும் சுயேச்சைக் குழுவின் பேச்சாளர் விஜயகாந்த், வேலணை பிரதேச சபையின் முதன்மை வேட்பாளர் சி.சிவநேசன் ஆகியோர் ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது இவ்வாறு கூறிய சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழு மேலும் கூறுகையில்,

சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழு யாழ். மாநகரம், கோப்பாய் பிரதேச சபை, வேலணை பிரதேச சபை உள்ளிட்ட சபைகளில் போட்டியிட வேட்பு மனு செய்தபோதும் யாழ். மாநகர வேட்புமனு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

ஏனைய இரு சபைகளிலும் நாம் கோடரி சின்னத்தில் போட்டியிடுகின்றோம். அந்தச் சபைகளில் நாம் தொடர்ச்சியாக பிரச்சார பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.




அதேநேரம் யாழ். மாநகரப் பகுதியில் எமது ஆதரவை நாம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வழங்க முடிவு செய்துள்ளோம்.

குறிபாக எமது பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்து அவர்களது இன்னல்கள் நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம்.

அதற்கான பாதையில் ஈ.பி.டி.பியே பயணிப்பதால் எமது ஆதரவாளர்கள் மடுமல்லாது ஒட்டுமொத்த மக்களும் வாக்களித்து வெற்றியடைய செய்ய வேண்டும்.

இதேநேரம் காணி விடுவிப்பு என்றும், அதிகாரத்தொனியில் மிரட்டியும் தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்குகளை அபகரிக்கவென்றே அரசியல் செய்யும் இந்த தேசிய மக்கள் சக்தியை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

அந்தவகையில் மக்கள் நலன்களை கருத்தில் கொண்டு, இம்முறை காலச் சூழலுக்கேற்ப மக்கள் தமது வாக்குகளைச் செலுத்தி தமது வாழ்வியலை வளப்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.– என்று தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காலக்கெடு விதிக்குக!

இலங்கையின் அந்நிய செலாவணி வருமானத்தைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி மிக முக்கியமானது. விசேட வரிச்சலுகைத் திட்டத்தின் கீழ் இலங்கை உட்பட சில நாடுகளுக்கு வரி விதிப்பின்றி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு பொருள்களை ஏற்றுமதி செய்ய ஒன்றியம் சிறப்பு அனுமதி வழங்கி வருகின்றது. இந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானது. 2023 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை 3.84 பில்லியன் யூரோ மதிப்புள்ள பொருள்களை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்துள்ளது. தொடர்ந்து அந்த ஏற்று மதி இலங்கைக்குப் பெரும் அந்நிய செலாவணி வருவாயை ஈட்டித் தருகின்றது.

ஆனால் இந்தச் சலுகையை இலங்கை தொடர்ந்து பெற்றுக் கொள்வதாயின் நல்லாட்சி, மனித உரிமைகளைப் பேணுதல், மகளிர் உரிமைகளை மதித்தல், தொழிலாளர் நலன்களை உறுதிப்படுத்துதல் போன்றவை உட்பட 27 சர்வதேச மரபுகளை செயல்படுத்துவதில் இலங்கை முன்னேற்றம் காட்ட வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் மோசமான ஆட்சி முறைமைகள் காரணமாக இந்தச் சலுகை நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் 2015 இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசு ஐரோப்பிய ஒன்றியத்தின் கைகளில், கால்களில் விழுந்து, இந்தச் சலுகையை 2017 பெற்றுக் கொண்டது. அப்போதும் நாட்டில் கொடூரமாகத் தொடரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படும் என இலங்கை அரசு உறுதியளித்தது.

அந்த உறுதிமொழி அளிக்கப்பட்டு எட்டு ஆண்டுகளாக நிறைவேற்றப்படவில்லை. கொடூரச் சட்டம் தொடர்கிறது. இதே சமயம் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய வரிச்சலுகை காலமும் அடுத்த ஆண்டுடன் முடிவடைகின்றது. அதைப் புதுப்பிப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக ஒன்றியத்தின் உயர்மட்டப் பிரதிநிதி குழு இலங்கைக்கு வந்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படுவது தொடர்பான வாக்குறுதி நிறைவேற்றப்படாதமை குறித்து இந்தக் கண்காணிப்பு குழு இப்போது மீண்டும் ஒரு தடவை கவலை தெரிவித்துள்ளது. மேலும் இணைய பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதில் உள்ள பின்னடைவு குறித்தும் அந்தக் குழு சிரத்தைக் காட்டி இருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் மீண்டும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்குக் கால அவகாசம் கோரியிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

இந்த விடயத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் மேற்படி கண்காணிப்புக் குழுவினரிடம் நேரடியாகத் தெரிவித்தமைப் போன்று நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கான விடயங்கள் தொடர்பில் கொழும்பு அரசுக்கு காலக்கெடுவுடன் கூடிய நிபந்தனை விதித்து அதன் அடிப்படையில் இந்த வரிச்சலுகையை நீடிப்பதன் மூலமே இலங்கையை ஒழுங்குமுறைக்கு - செயற்பாட்டு நடவடிக்கைக்கு - கொண்டு வரலாம் என்று எண்ணுகிறோம்.

திகதி குறித்து, நிபந்தனைகள் விதித்து, விடயங்களை அணுகினால் மட்டுமே கொழும்பை ஓரளவுக் கேனும் திருத்தி சரியான வழிக்குக் கொண்டுவர முடியும்.

# ஒரு சின்னத்துக்கு நேரே ஒரு புள்ளடி!

## உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கும் முறை தொடர்பான சிறப்பு பார்வை

2025 உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஆறாம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறவிருக்கிறது.

அதாவது இன்னும் சில தினங்களில் நடைபெறவிருக்கும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பு நடைபெறும் தெரிவு எவ்வாறு நடைபெறும் என்பது தொடர்பாக காரைதீவு பிரதேச சபையை உதாரணமாக வைத்து இந்தத் தெளிவுபடுத்தும் கட்டுரை அமைகிறது.

சுருக்கமாகக் கூறினால் வழங்கப்படும் வாக்குச் சீட்டில் ஒரு சின்னத்துக்கு நேரே ஒரு புள்ளடி மட்டும் இட்டால் போது மானது.

ஏனைய ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத்தேர்தல், மாகாணசபை தேர்தல் போன்று இரண்டு மூன்று சின்னங்க ளுக்கு இலக்கம் இடுவதோ அல்லது சின்னத்துக்குப் புள்ளடி இட்டபின் விருப்பு இலக்கத்துக்கு மேல் புள்ளடி இடுவதோ இந்த தேர்தலில் இல்லை.

மாநகரசபை, அல்லது நகரசபை அல்லது பிரதேச சபைகளில் பல கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் போட்டியிடும் போது அந்த கட்சியின் சின்னங்கள், சுயேட்சை குழுக்களின் சின்னங்கள் மட்டுமே வாக்குச்சீட்டில் பொறிக்கப்பட்டிருக்கும். வேட்பாளர்களுடைய பெயர் இருக்காது.

அரசியல் கட்சிகளாயின் சிங்கள அகரவரிசைப்படி நிரல் நிலை அமையும். அரசியல் கட்சிகளின் பெயர் மூன்று மொழிகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டு அதற்கு நேரே கட்சிகளின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். கட்சிகளின் பெயர்களுக்கு, சுயேட்சைகுழுக்கள் இலக்கத்துடன் வலது புறம் சின்னங்கள் (படம்) பொறிக்கப்பட்டிருக்கும்.

வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களில் தமக்கு பிடித்த வேட்பாளர் எந்த சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதை இனம்கண்டு அவர் போட்டியிடும் சின்னத்துக்கு நேரே புள்ளடி (ஒ) இட்டால் போதுமானது. வேறு எதுவும் செய்யத்தேவையில்லை.

எக்காரணம் கொண்டும், ஒன்றுக்கு மேற்பட்ட சின்னங்களுக்கு அடையாளம் இடுதல் கூடாது. அவ்வாறு இட்டால் அது நிராகரிக்கப்படும். எந்த ஒரு வேட்பாளரின் பெயரும் வாக்கு சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்காது என்பது தெரிந்ததே.

உதாரணத்துக்குக் காரைதீவு பிரதேச சபையை எடுத்துக்கொண்டால் 07 வட்டாரங்கள் இருக்கின்றன.

அங்கு 07 பிரதான வேட்பாளர்களும் துணை வேட்பா ளர்கள் 07 (மேலதிக வேட்பாளர்கள்) மொத்தம் 14 வேட்பா ளர்கள். உள்ளனர் .

இவர்கள் தாம் சார்ந்த கட்சிகளுக்கு அல்லது சுயேட்சை குழுக்களுக்காக பிரசாரம் செய்வார்கள்.

தேர்தல் தினத்தில் எதிர்வரும் (065) வாக்களிப்பு நிலையங்களில் காலை 07 மணி தொடக்கம் மாலை 04 மணிவரை வாக்களிப்பு பணிகள் நடைபெறும்.

வாக்களிப்பு நிறைவுற்ற பின்னர் 4.15 மணியளவில் உடனடியாகவே அந்தந்த வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெண்ணப்படும்.

அதில் எந்தச் சின்னம் கூடிய வாக்கைப் பெறுகிறதோ, அந்தச் சின்னத்துக்கு உரிய பிரதான வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்.

துணை வேட்பாளர்கள் 07 பேரில் எந்த கட்சியில் இருந்து தெரிவானார்கள் என்பது வாக்களிப்பு நிலையங்களில் அறிவிக்கப்பட மாட்டாது. அதாவது விகிதாசார பட்டியல் முடிவு பின்னர் மாவட்டத்தில் அறிவிக்கப்படும்.

அதாவது அவை அன்று இரவு அம்பாறை ஹார்டி தொழில்நுட்ப கல்லூரியில் பிரதான வாக்கு கணிப்பு நிலையங்களில் வாக்குச் சீட்டுகள் சபை வாரியாக எண் ணப்படும்.

சகல கட்சிகளின் மொத்த வாக்கு கணிப்பீட்டின்படி அவை அறிவிக்கப்படும்.

காரைதீவுக்கான அந்த 07 உறுப்பினர்களில் ஏற்கனவே தெரிவான உறுப்பினர்களில் பெண் பிரதிநித்துவம் 25 வீதத்துக்குக் குறைவாக இருப்பின் அந்த 07 துணை வேட்பாளர்களில் இருந்து எந்தந்த கட்சி ஆசனங்களை பெறுகிறதோ அந்த கட்சியில் அல்லது சுயேச்சை குழுவில் இருந்து எத்தனை பெண் உறுப்பினர்களை தெரிவு செய்து தரவேண்டும் என்று தேர்தல் ஆணையகம் குறித்த கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்குக் கட்டளை இடும்.

யாரை நியமிப்பது என்ற உத்தியோகபூர்வ முடிவு சம்மந்தப்பட்ட கட்சிகள் ஆராய்ந்து முடிவெடுப்பார்கள்.

அந்த முடிவைக் கட்சிச் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழு தலைவர், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிப்பார்கள்.

அந்த 07 துணை உறுப்பினர்களும் பிரதிநிதிகளாக முதல் அமர்வில் சத்தியப்பிரமாணம் எடுப்பார்கள்.

ஒரு கட்சியில் 50 வீதத்துக்கு மேலாக உறுப்பினர்கள் தெரிவானால் அந்த கட்சி செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவர் நேரடியாக பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் பெயர்களை பரிந்துரை செய்ய கேட்கப்படுவார்கள்.

அதாவது காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்கள் மொத்தம் 11. ஆகவே ஆறு ஆசனங்களை ஒரு கட்சி பெற்றால் அந்த கட்சி செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவர் முறையே தவிசாளர், உப தவிசாளர் பதவிகளைத் தெரிவு செய்யும் உரிமை உண்டு. அவர்கள் ஆட்சி அமைக்க போதுமான ஆசனங்கள் ஆறு ஆகும்.

பொதுவாக இந்தக் கலப்பு தேர்தல் முறையில் தனியொரு கட்சி அல்லது சுயேச்சை அணி அறுதிப் பெரும்பான்மை பெறுவது என்பது பெரும்பாலும் சாத்தியமில்லை. எனவே கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அந்த வகையில் காரைதீவு பிரதேச சபைத் தேர்தலில் சிலவேளைகளில் 6 ஆசனங்களை யாரும் பெறவில்லை என்றால் அடுத்த தெரிவு முறைமைக்கு செல்ல வேண்டும்.

50 வீதத்துக்குக் குறைவாக ஆசனங்களை பெற்றால் இரண்டு அல்லது மூன்று கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்கள் கூடி கலந்துரையாடி ஆட்சி அமைப்பது தொடர்பாக கலந்துரையாடி தவிசாளர் உப தவிசாளர் ஆகியோரை அவர்களுக்குள் தெரிவு செய்வார்கள் .

முதல் அமர்வில் அதிகாரம் அளிக்கப்பட்ட உள்ளூராட்சி சபை அலுவலர் முன்னிலையில் ஜனநாயக ரீதியாக அந்தத் தெரிவு இடம்பெறும்போது அவற்றை முறைப்படி பிரேரித்து ஆமோதித்து தெரிவுகள் இடம்பெறும்.

தெரிவுகளில் இணக்கப்பாடு இல்லாவிட்டால் வாக்கெடுப்பு மூலம் தெரிவு இடம்பெறும். அது இரகசிய வாக்கெடுப்பா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பா? என்பது பற்றி சபையே முடிவு செய்யும். ஒருமித்த கருத்து வராவிட்டால் சிலவேளைகளில் அதற்கும் வாக்கெடுப்பு நடாத்த வேண்டி வரலாம்.

அந்த வாக்கெடுப்பில் 50 வீதத்துக்கும் கூடிய வாக்குகளை யார் பெறுகிறாரோ அவர் தவிசாளராவார். உப தவிசாளர் தெரிவும் அதே பாணியில் நடைபெறும்.

சிலவேளைகளில் வாக்கெடுப்பில் சரி சமனான வாக்குகளை இருவரும் பெற்றுவிட்டால் திருவுளச்சீட்டு குலுக்கல் முறையில் தெரிவு இடம்பெறும். இதில் அதிஷ்டம் கைகொடுக்கும் நபர் தவிசாளராவார்.

தெரிவான தவிசாளர் பிரதான சிம்மாசனத்துக்கு அழைக்கப்பட்டு சம்பிரதாய முறைப்படி அமர்த்தப்படுவார்.

அந்தளவில் அந்த அமர்வு அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்படும். இன்னும் சில நாள்கள் பொறுத்திருப்போம்.



**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு நிருபர்.**

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## பொய்யான வாக்குறுதிகளுக்கு பாடம் புகட்டும் தேர்தல்தான் இது!

(றிபாஸ்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதிகமான வட்டாரங்களை வென்று அட்டாளைச்சேனை பிரதேச சபையை ஆட்சி அமைக்கும் என ஜும்ஆ பள்ளி வட்டார வேட்பாளர் யூ.எல்.நிசார் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள அவரது கட்சிக்காரியாலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சலுகைகளுக்காகவோ அல்லது பணத்துக்காகவோ சோரம் போகும் கட்சி அல்ல. எமது மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வதற்காகவே பயணித்துக் கொண்டிருக்கின்றது.

கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு மக்களின் கைகளிலேயே உள்ளது. மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் கட்சியும் அதன் தலைமையும் என்றால் அது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்பதை யாரும் மறுக்கவே முடியாது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட பாலமுனை, ஒலுவில் தீகவாபி, ஆலங்குளம் திராய்க்கேணி போன்ற பிரதேசங்களில் ஒழுங்கு முறையான அபிவிருத்திகளை செய்வதுடன் மக்களின் தேவைகளையும், வாழ்வாதார திட்டங்களையும் பெற்றுக் கொடுப்பதே எமது கட்சியினது, வேட்பாளர்களினதும் நோக்கமாகும்.

தேர்தல்கள் வருகின்றபோது பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிவிட்டு தெரிவு செய்யப்பட்ட பின்பு மக்களை மறந்து விடுகின்றனர்.

அவ்வாறானவர்களை மக்கள் இனம் கண்டு இத்தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.– என்றார்.

## உள்ளூராட்சி சபைகளுக்குச் செல்வோரை உங்கள் ஊரில் இருந்து தெரிவு செய்யுங்கள்

### தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவிப்பு





(எஸ். நிதர்ஷன்)

உங்கள் ஊர்களில் இருந்து உள்ளூராட்சி சபைகளுக்கு செல்வோரே உங்கள் ஊரை அபிவிருத்தி செய்வார்கள். உங்கள் ஊரில் இருந்து உங்கள் ஊரவனை சபைகளுக்கு அனுப்புங்கள் என்று தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

அவரது வழிகாட்டலில் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையில் கைக்கோடாரி சின்னத்தில் சுயேச்சை குழுவில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து உரும்பிராய் பகுதிகளில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், மக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே , மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு பல்வேறு உதவி திட்டங்களை இதுவரை காலமும் செய்து வந்தேன். கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட செல்வபுரம் , யோகபுரம் , உரும்பிராய் தெற்கு போனற பகுதிகளில் வாழும் மக்களுக்கு பல்வேறு நலன்புரி உதவிகளை வழங்கியுள்ளேன்.

இந்த ஊர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எந்த அரசியல்வாதிகளோ, அரசியல் கட்சிகளோ முன் வரவில்லை. இவர்களை தமது தேர்தல் அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இவற்றை நேரில் கண்டு வேதனை அடைந்தமையாலேயே, எனது வழிகாட்டலில் இந்த கிராமங்களில் வாழும் அந்த மக்களில் இருந்து வேட்பாளர்களை தெரிவு செய்து தேர்தலில் போட்டியிட வைத்துள்ளோம்.

இந்த தேர்தலில் இந்த கிராமத்தில் நான் போட்டியிட முடியாது. இருந்தாலும் என் வழிகாட்டலில் கிராமத்தில் இருந்தே வேட்பாளர்களை களமிறக்கியுள்ளேன்.

நான் எனது சொந்த நிதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை செய்துள்ளேன். இனியும் செய்து கொள்ளுவேன். ஆனால் எமக்கு ஒரு அரசியல் அதிகாரம் கிடைக்கும் பட்சத்தில் மிக விரைவாக உங்கள் கிராமத்தை அபிவிருத்தி செய்ய முடியும். எனவே உங்கள் ஊரில் இருந்து உங்களவனை தேர்ந்தெடுக்க கைக்கோடாரி சின்னத்தில் போட்டியிடும் எமது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களியுங்கள்.– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெருகல் பிரதேச பரப்புரைக் கூட்டம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்டம் வெருகல் பிரதேச சபைக்கு இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று புதன்கிழமை (30) காலை வெருகலில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளில் தமிழர்கள் அதிகமாக வாழக்கூடிய பிரதேச சபை வெருகலாகும். வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 10 கிராம சேவகர் பிரிவில் 07 கிராம சேவகர் பிரிவுகள் முழுமையாக வனவிலங்கு திணைக்களத்துக்குள் காணப்படுகின்றன. இதை விடுவிக்க வேண்டியது எமது முதன்மை தேவையாக இருக்கிறது.

ஏனைய இடங்களோடு ஒப்பிடும் போது வெருகல் பின்தங்கி காணப்படுகிறது. இதனை அவிருத்தி செய்ய வேண்டுமாக இருந்தால் வெருகல் பிரதேச சபை தமிழர்களின் கையில் இருக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினாராக என்னால் முடிந்த சேவைகளை வெருகல் பகுதிக்கு செய்திருக்கின்றேன். செய்தும் வருகின்றேன்.

வெருகல் பிரதேச சபையில் இளைஞர்கள், திறமையானவர்களை நிறுத்தியிருக்கின்றோம். ஆகையால் வெருகல் பிரதேச சபையில் நிச்சயமாக தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கும்.– என்றார்.





## கல்லடிப் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி!

**(பழுவூரான்)**

“வெற்றி நமதே ஊர் நமதே” எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாநகர சபையின் கல்லடி – 14 ஆம் வட்டாரத்துக்கான தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நேற்று (30) கல்லடி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணித் தலைவி திருமதி வனிதா தேவப்பெருமாள், வங்கி மற்றும் நீதிமன்றத்தின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினருமாகிய தோழர் திலிப்குமார் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பரு.கற்பகப்பிள்ளையார் வருடாந்த மகோற்சவம்!

பருத்தித்துறை மாதனை அருள்மிகு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று (30) புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்தோற்சவமும் நடைபெற்று மஹோற்சவம் நிறைவுபெறும்.

கோவில் அர்ச்சகர்களின் உதவியுடன் அளவெட்டி கிரியாஜோதி சிவஸ்ரீ சுதர்சனக்குருக்கள் பிரதம குருக்களாக இருந்து இந்த மஹோற்சவத்தை நடத்தி வருகிறார்.




# உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை அறியாமலேயே அரச தரப்பு பிதற்றுகின்றது

## சங்குத் தரப்பின் சுரேன் குருசாமி சாட்டை

உள்ளூராட்சி முன்மொழிவுகளை கண்மூடிக் கொண்டு அனுமதிப்பது என்றும் அபிவிருத்தி சம்பந்தமான நிதி ஒதுக்கீடுகளை பற்றியும் அரச தரப்பினர் வாய்க்கு வந்தபடி பேசித் திரிகிறார்கள்.

– இப்படி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் (சங்குச் சின்னம்) வட மாகாண தேசிய அமைப்பாளர் கு. சுரேந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முதல் தரம் அரசாட்சியில் இருப்பதாலோ என்னவோ மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகாரங்கள் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. உள்ளூராட்சி முன்மொழிவுகள் ஜனாதிபதியிடமோ அமைச்சர்களிடமோ செல்வதில்லை என்பதை அவர்கள் எதிர்வரும் காலங்களில் தான் அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது.



பிரதானமாக உள்ளூராட்சி சபைகள் மாகாண சபையினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டவை. இதை முதல் ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளுக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்குகின்ற நிதி என்பது புறக்கணிக்கத்தக்க அளவாகும். வரவு செலவு திட்டம், ஒருங்கிணைப்பட்டநிதி மற்றும் மத்திய வங்கியின் கணக்கு என்பவற்றை சரியாக வாசித்து புரிந்து கொள்பவர்கள் இப்படியான கருத்துக் களை பேச மாட்டார்கள். உள்ளூராட்சி சபைகள், தாங்கள் மக்களிடம் பெற்றுக் கொள்கின்ற நிதியிலிருந்து தங்களுடைய திட்ட வரைவுகளையும் முன்மொழிவுகளையும் தமது சபையிலே சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்கிறார்கள். அதன் அடிப்படையில் தான் அபிவிருத்திகள் முன்னெடுக் கப்படுகின்றன.

ஆனால் அரசு தரப்பு சொல்லுகின்ற கருத்துக்களில் இருக்கக்கக்கூடிய அபாயத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அரச தரப்பின் கைவசம் வரும் உள்ளூராட்சி சபைகள் மத்திய அரசிடமே அனுமதிகளையும் முன்மொழிவுகளையும் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் படுவார்கள். அந்த நிலை ஏற்பட்டால் எமது உள்ளூராட்சி சபைகளுக்கான நோக்கங்கள் தவறாக வழி நடத்தப்படும்.

இதில் நமது மக்கள் எச்சரிக்கையாக இருந்து நமது வேட்பாளர்களுக்கு ஆதரவளித்து சபைகளை பலப்படுத்துவதன் மூலமே நிலைபேறான அபிவிருத்தியை எமது பிரதேசங்களில் முன்னெடுக்க முடியும். இதில் தமிழ் மக்கள் மிக அவதானமாக வரும் தேர்தலில் செயல்பட வேண்டும் என கோருகிறோம். – என்றார்.






# தொழிலாளர் தேசிய சங்க 60 ஆவது வருட பூர்த்தி

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தொழிலாளர் தேசிய சங்கத்தின் 60 ஆவது வருட பூர்த்தியும் மே தின விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் கொடியேற்றும் நிகழ்வும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பிலிப் தலைமையில் இன்று (01) ஹட்டன் அலுவலக வளாகத்தில் நடைபெற்றன.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு அலுவலர்கள் பணிப்பகிஷ்கரிப்பில்

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இன்றைய தினம் வியாழக்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப் . போதனா வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வரும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தமக்கு, சம்பள உயர்வு கோரியும், தற்போது பிறிதொரு நிறுவனம் ஒன்று, எம்மை பொறுப்பெடுக்க வேண்டிய நிலையில், அந்நிறுவனம் எம்மை உரிய முறையில் பொறுப்பெடுக்கவில்லை, உடனடியாக அந்நிறுவனம் எம்மை பொறுப்பெடுக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களின் போராட்டம் காரணமாக, வைத்தியசாலையின் பாதுகாப்பு மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு என்பன கேள்வுக்குள்ளாகியுள்ளன.

அத்துடன், நோயாளர்களை பார்வையிட வருவோர் கட்டுப்பாடுகள் இன்றி வைத்தியசாலை விடுதிகளுக்குச் செல்வதனால், நோயாளிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதுடன், சிகிச்சை வழங்குவதிலும் நெருக்கடி நிலைமை காணப்படுகிறது.

# உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு செயலமர்வு திருகோணமலை செயலகத்தில்





(ஹஸ்பர் ஏ.எச்.)

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வானது நேற்று (30) திருகோணமலை அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக வட்டாரத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ். கே. டி. நிரஞ்சனால் தெளிவூட்டப்பட்டது. இந்த முறை உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் திரு கோணமலை மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்களில் 129 நிலையங்களில் வாக்கெண்ணல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# மன்னார் போக்குவரத்து சாலையின் அவலம்; போக்குவரத்து சபைத் தலைவர் திடீர் விஜயம்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் இலங்கை பொது போக்குவரத்து சாலையின் அவல நிலை தொடர்பில் ஆராய்வதற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை இலங்கை பொது போக்குவரத்து சபையின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் நேற்று (30) மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் போக்குவரத்து சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான பஸ்கள் உரிய பராமரிப்பின்றி மன்னார் போக்குவரத்து சாலையில் நிறுத்தப்பட்டு கவனிப்பின்றிக் காணப்பட்ட நிலை குறித்து ஆராயப்பட்டது.

வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் பல வருடங்களாக கொள்வனவு செய்யப்படாமையே இந்த நிலைக்குக் காரணம் என்று மன்னார் போக்குவரத்து சாலை தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் மன்னார் மாவட்டத்தில் இருந்து பல தூர பகுதிகளுக்கான சேவை நீண்ட காலங்களாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது கொழும்பு கண்டி போன்ற தூர பகுதிகளுக்கு மிகவும் பழுதடைந்த பேருந்துகளை மன்னார் போக்குவரத்து சாலை பயன்படுத்தி வருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறான நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் பொது போக்குவரத்து சாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் விரைவில் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் பழுதடைந்துள்ள பஸ்களை மீள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான உதிரிபாகங்கள் விரைவில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவற்றில் ஐந்து திருத்தப்பட்ட இஞ்சின்கள் விரைவில் மன்னார் போக்குவரத்து சாலைக்கு கையளிக்கப்பட உள்ளன என்றும் தெரிவித்தார்.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு பொது போக்குவரத்து சாலைகளின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள் ளது என்றும் பல கோடி பெறுமதியான அரச சொத்துக்கள் விரயம் செய்யப்பட்டுள்ளன எனவுட் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலைக்கான காரணம் தொடர்பில் விரைவில் விசாரணைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அதன் அடிப்படை விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொது போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்திருந்தார்.

மன்னார் போக்குவரத்துச் சாலையின் இந்த நிலை தொடர்பிலும் மன்னார் போக்குவரத்து சாலையில் பயன்படுத்தப்படும் பஸ்களது நிலை தொடர்பிலும் நிர்வாக சீர்கேடுகள் தொடர்பிலும் பல வருடங்கள் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.





# சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

(உடப்பு க.மகாதேவன் )

வட்டவான் ஸ்ரீ கல்யாண முருகன் அறநெறிப் பாடசாலை மற்றும் வட்டவான் இந்து ஆலய பரிபாலன சபையால் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.









# சிட்னியில் ஒஸ்காரின் சித்திரைத் திருவிழா!

**(வி.ரி. சகாதேவராஜா)**

ஒஸ்கார் அமைப்பின் 2025 ஆம் ஆண்டுக்கான விசுவாவசு சித்திரை கலாசார விளையாட்டு விழாவும் ஒன்றுகூடலும் சிட்னி நகரில் சனிக்கிழமை நடைபெற்றன.

ஆஸ்திரேலியாவில் வதியும் காரைதீவு மக்களது அமைப்பான ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கலாசார நிகழ்வுகளில் வரிசையில் மிட்டாய் பை ஓட்டம், பலூன் காலில் கட்டி உடைத்தல், சாக்கு ஓட்டம் , தேசிக்காய் ஓட்டம், பணிஸ் உண்ணல், முட்டி உடைத்தல், சங்கீத கதிரை, கயிறிழுத்தல் முதலான சித்திரை புத்தாண்டை சிறப்பிக்கும் வகையிலான நிகழ்வுகளும் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

ஒஸ்கார் அமைப்பின் செயலாளர் தி.லாவண்யன், பொருளாளர் வீ.விவேகானந்தமூர்த்தி உள்ளிட்ட ஒஸ்கார் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.







# அம்பாறை மாவட்டத்தில் 19 சபைகளுக்கான தேர்தலுக்கு 458 வாக்களிப்பு நிலையங்கள்!

## இதுவரை 385 முறைப்பாடுகள்

**( வி.ரி.சகாதேவராஜா)**

2025 ஆண்டுக்கான அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உள்ளூராட்சிமன்ற தேர்தல் மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 4,78000 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக 458 வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 202 இடங்கள் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக இதுவரையும் 385 சிறு சிறு தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் அம்பாறை மாவட்ட அரச அதிபருமான சிந்தக அபேவிக்ரம இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களின் குழுக்களுடையே வேட்பாளர்களின் புகைப்படம் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டுவதில் ஏற்றபட்ட சம்பவங்களே தேர்தல் வன்முறைச் சம்பவங்களாக பதிவாகி உள்ளன என்றும் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் தேர்தல் முறைப்பாட்டு பிரிவு இயங்கி வருகிறது. ஒவ்வொரு பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள் என்பவற்றிலும் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுள் ஆரம்பிக்கப்பட்டு 24 மணி நேரமும் இயங்கி வருகின்றன. தேர்தல் தொடர்பான



முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

24 மணி செயற்படும் வகையில் முக்கி கேந்திர நிலையங்களில் பொலிஸாரும் முப்படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

வேட்பாளர்களின் புகைப்படம் தாங்கிய சுவரொட்டிகள் பொலிஸாரால் அகற்றப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.



# சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை விசேட பூசைகளுடன் ஆரம்பமானது

சைவமரபு– பாரம்பரியமிக்க கதிர்காமத்துக்கான பாதயாத்திரை செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன், சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட பூசை வழிபாடுகளுடனும், காலை ஆகாரமும் ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டு ஆச்சிரம சுவாமிகளது ஆசிர்வாதத்துடன் ஆரம்பமாகியது.

வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய மாவட்டங்கள் ஊடாக 815 கிலோமீற்றர் தூரம் கடந்து கதிர்காமம் சென்றடையும். கதிர்காம ஆலய கொடியேற்ற நிகழ்வு ஜூன் 26 ஆம் இடம்பெறவுள்ளது.











# இந்தியாவின் வான்வெளியில் பாக். விமானங்கள் பறக்க தடை



பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியில் பறக்க தடைவிதித்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசு தரப்பில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பாகிஸ்தான் தரப்பில் இந்திய விமானங்கள் அந்த நாட்டின் வான்வெளியில் பறக்க அண்மையில் தடை பிறப்பிக்கப்பட்டது. அதற்கு பதிலடி தரும் வகையில் இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

எதிர்வரும் மே 24 ஆம் திகதி இந்திய நேரப்படி காலை 5.29 வரையில் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியை பயன்படுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 'பாகிஸ்தான் நாட்டு விமானங்கள், அந்த நாட்டை சேர்ந்த நிறுவனங்கள் இயக்கும் விமானங்கள், இராணுவ விமானங்கள் என எந்தவிதமான வானூர்தியும் இந்திய வான் எல்லையை பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளது' என மத்திய அரசு தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட திகதியை நெருங்கும் சமயத்தில் அது திருத்தப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கெனவே நிதி நெருக்கடியால் பாகிஸ்தான் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் இந்த நடவடிக்கை பாகிஸ்தான் விமான நிறுவனங்களுக்கு மேலும் நெருக்கடியை தரும் எனவும், பயண நேரத்தை அதிகரிக்க செய்யும் எனவும் கூறப்படுகிறது. குறிப்பாக பாகிஸ்தானில் இருந்து தென்கிழக்கு ஆசியாவுக்கு செல்லும் விமானங்கள் இந்திய வான்வெளியை தவிர்க்க வேண்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க முப்படைகளுக்கும் முழு சுதந்திரம் அளிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இதனால் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவுகிறது. எல்லை கட்டுப்பாட்டு கோட்டை கடந்து இந்திய எல்லைக்குள் அத்துமீறி பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கி சூடு மேற்கொண்டது. இதையடுத்து இந்திய எல்லையில் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன.

# பாகிஸ்தான் நடிகை ஹனியா அமீருக்கு தண்ணீர் அனுப்பினார் இந்திய ரசிகர்

சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் நடிகை ஹனியா அமீருக்கு தண்ணீர் போத்தல்களை இந்திய ரசிகர் ஒருவர் அனுப்பியுள்ளார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள பஹல்காமில் கடந்த மாதம் 22 ஆம் திகதி இந்திய சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு தண்ணீர் அளிக்கும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் நடிகை ஹனியா அமீருக்கு, இந்திய ரசிகர் ஒருவர் தண்ணீர் போத்தல்களை அனுப்பும் காணொலி இணையத்தில் வைரலாகி உள்ளது. நடிகை ஹனியா அமீருக்கு இந்தியாவில் லட்சக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர்தான் இந்த போத்தல்களை பொதி சேவை மூலம் அனுப்பியுள்ளார். சிந்து நதி நீர், நடிகைக்கு இனி கிடைக்காது என்பதால் அவர் மீது வைத்துள்ள அன்பின் காரணமாக இந்த தண்ணீர் போத்தல்களை அவர் அனுப்பியுள்ளார்.



# பாகிஸ்தானுக்காக பேசுவது தேச துரோகம்: கர்நாடக முதல்வர் சித்தராமையா கருத்து

கர்நாடகாவில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக முழக்கம் எழுப்பிய நபர் அடித்து கொல்லப்பட்ட நிலையில், அம்மாநில முதல்வர் சித்தராமையா, பாகிஸ்தானுக்கு ஆதரவாக முழக்கமிடுவது தேச துரோகம் என தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் மங்களூருவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின்போது 30 வயதான நபர் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என கோஷம் எழுப்பினார் என கூறப்படுகிறது. அவரை 20 இற்கும் மேற்பட்டோர் கும்பலாக தாக்கியதில் அவர் உயிரிழந்தார். இதுகுறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, இதுவரை 20 பேரை கைது செய்துள்ளனர்.



இதுகுறித்து பெங்களூருவில் நேற்று செய்தியாளர்கள் கர்நாடக முதல்வர் சித்தராமையாவிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில்,

"பாகிஸ்தானுக்கு ஆதரவாக முழக்கம் எழுப்பியது தேச துரோகம். அந்த நாட்டுக்கு ஆதரவாக யார் பேசினாலும் அது நமது நாட்டுக்கு செய்யக்கூடிய துரோகம் ஆகும். அதில் யாருக்கும் எந்த மாற்று கருத்தும் இருக்காது.

அதேவேளையில் பாகிஸ்தானை எதிரியாக சித்தரித்து இங்கு சிலர் அரசியல் செய்வதையும் மக்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்." என்றார்.

# இந்திய எல்லையில் படைகள் குவிப்பு: பாகிஸ்தானில் பதற்றநிலை அதிகரிப்பு

பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவை நேற்று மீண்டும் ஆலோசனை நடத்தியது. இதனிடையே, இந்திய எல்லையில் படைகள் குவிக்கப்பட்டுள்ளதால் எந்த நேரமும் தாக்குதல் நடத்தப்படலாம் என பாகிஸ்தானில் பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவம், அந்த நாட்டு உளவுத் துறைக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து, பஹல்காம் தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவை கூட்டம் கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் உடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பது, விசா நிறுத்தம் உள்ளிட்ட சில முடிவுகள் எடுக்கப்பட்டன. இதையடுத்து, சிம்லா ஒப்பந்தம் ரத்து உள்ளிட்ட சில நடவடிக்கைகளை பாகிஸ்தான் எடுத்தது.



இந்த சூழலில், பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் உயர்நிலை ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான், இராணுவ தளபதி உபேந்திர திவிவேதி, கடற்படை தளபதி தினேஷ் கே திரிபாதி, விமானப்படை தளபதி அமர் பிரீத் சிங் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், பஹல்காம் தாக்குதலில் தொடர்புடையவர்களுக்கு தக்க பதிலடி கொடுப்பது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. எந்த இடங்களில், எவ்வாறு தாக்குதல் நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் முப்படைகளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில், ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவை கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் பஹல்காம் தாக்குதலில் தொடர்புடையவர்களுக்கு பதிலடி கொடுப்பது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய எல்லையில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை தயார் நிலையில் உள்ளன. இதனால் இரு நாடுகளுக்கிடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்தியா எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தலாம் என பாகிஸ்தானியர்கள் கருதுகின்றனர். இதனால் அந்நாட்டில் பதற்றம் நிலவுகிறது.

# இந்திய எல்லையிலுள்ள பாகிஸ்தான் பள்ளிவாசல்களில் தொழுகை நிறுத்தம்

காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலால் 26 பேர் உயிரிழந்தனர். இதற்கு இந்தியா பதிலடி கொடுக்கும் என்று பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது. அதற்கேற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பாகிஸ்தான் எடுத்து வருகிறது.

அதன் ஒரு கட்டமாக பாகிஸ்தான் எல்லைகளில் உள்ள பொதுமக்களை வேறு இடங்களுக்கு மாற்றியதாக தெரிகிறது. ஏனெனில், ஜம்மு காஷ்மீர் எல்லைக்கு அப்பால் பாகிஸ்தானின் எல்லையில் பல பள்ளிவாசல்கள் உள்ளன. அங்கு 5 வேளை தொழுகைக்கு முன்பு பாங்கு ஒலிக்கப்படும். அந்த ஒலி இந்திய எல்லைகளிலும் கேட்பதுண்டு.

அந்த பாங்கு ஒலியை காஷ்மீர் எல்லையில் பாதுகாப்பு பணியில் உள்ள இராணுவத்தினரும் கேட்பதுண்டு. இந்நிலையில், பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு இந்த பாங்கு ஒலிகள் கேட்பது இல்லை என இந்திய எல்லைகளில் இருந்து தகவல்கள் வருகின்றன. இதுபோன்ற சூழல், கார்கில் போரின் போதும் இருந்தது. கார்கில் போருக்கு பிறகு தற்போது மீண்டும் எல்லையின் பாகிஸ்தான்



மசூதிகளில் பாங்கு ஒலி நிறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவமும் பாதுகாப்புகளை பலப்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஜம்முவின் ஆர்.எஸ்.புரா செக்டார் மற்றும் கார்கில் எல்லைப் பகுதிகளில் தற்போது அமைதி காணப்படுகிறது. ஆர்.எஸ்.புரா செக்டாருக்கு அப்பால் பாகிஸ்தானில் சியால்கோட் பகுதி உள்ளது. இங்குள்ள கஜ்ரியால், உன்ச்சி பெயின்ஸ், கெய்சரி, கூன்ஸ் உள்ளிட்ட பல கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் இருந்து பகல் நேரங்களில் கேட்கும் ஒலிகளும் தற்போது கேட்பதில்லை.

அதேபோல், எல்லைகளில் உள்ள வயல்வெளிகளில் பாகிஸ்தான் விவசாயிகள் வேலை செய்யும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. சிலர் கால்நடைகளை இந்திய எல்லைகளுக்கு மிக அருகில் மேய வைப்பது வழக்கம். அதையும் பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு காண முடியவில்லை என இந்திய எல்லையோர கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கனடா முரசு
பக்கம் 03
வியாழக்கிழமை 01/05/2025

## சீரற்ற காலநிலையினால் கியூபெக்கில் மின் தடை

கியூபெக் மாகாணத்தில் வீசிய சூறாவளியினால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மின்சாரம் இன்றி அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

02



# மார்க் கார்னியை வாழ்த்தினார் ட்ரம்ப்

**கனடா பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்ற மார்க் கார்னிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின், அண்டை நாடுகளுக்கான இறக்குமதி வரியை அதிகரித்து அறிவித்தார். இதனால் அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் இடையிலான உறவுகள் மோசம் அடைந்தது. கனடாவை 51 ஆவது மாநிலமாக மாற்றுவோம் என ட்ரம்ப் கூறினார். இது விமர்சனங்களை ஏற்படுத்தியது.**

இதன் பிறகு தற்போது பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்ற, மார்க் கார்னி ட்ரம்ப் மீது கடுமையான விமர்சனங்களை முன் வைத்தார். அவர், "நான் பல மாதங்களாக எச்ச ரித்து வருவது போல அமெரிக்கா நமது நிலம், நீரை விரும்புகிறது. அமெரிக்கா நம்மை சொந்தமாக்கி கொள்ள விரும்புகிறது. அது ஒரு போதும் நடக்காது" என மார்க் கார்னி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலுக்கு மத்தியில், கனடா பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்ற மார்க் கானிக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி ட்ரம்ப் உடன் மார்க் கார்னி பேசினார். பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்ற மார்க் கார்னிக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். இரு நாட்டு தலைவர்களும் எதிர்காலத்தில் நேரில் சந்திக்க ஒப்புக்கொண்டனர்" என கனடா பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டு உள்ளது.

# ஹேமில்டன் மேயர் ஆண்ட்ரியா ஹோர்வத் சீரற்ற காலநிலையினால் விழுந்து காயம்

கனடாவின் ஹேமில்டன் நகர மேயர் ஆண்ட்ரியா ஹோர்வத், நகர மன்ற கட்டடத்தின் வெளியே ஏற்பட்ட கடும் காற்று காரணமா படிக்கட்டில் தவறி விழுந்து காயமடைந்துள்ளார்.

ஹோர்வாத், கை முறிவுக்காக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

முதலில், இது ஒரு விபத்து எனக் கூறப்பட்டாலும், அவருக்குக் ஏற்பட்ட காயங்கள் பற்றிய விவரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

பின்னர் புதன்கிழமையன்று வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட தகவலில், கை முறிவு மற்றும் கால் காயம் தொடர்பாகவும் பரிசோதனை நடந்து வருவதாக அவரது குழு தெரிவித்தது.

டோரோண்டோ பெரும்பாகம் மற்றும் ஹேமில்டன் பகுதிக்காக கனடா வானிலை நிறுவனம் பல வானிலை எச்சரிக்கைகளை வெளியிட்டிருந்தது.

சில பகுதிகளில் 100 கிலோ 02







## சீரற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில பகுதிகளில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தை கடந்த காற்று காரணமாக மின்கம்பி அமைப்புகளில் பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

பல உபகரணங்களை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என கனடா சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை (ECCC) தெரிவித்துள்ளது.

மாண்ட்ரியல் தீவின் பல பகுதிகளில் மரங்கள், மின்கம்பிகள் விழுந்ததுடன், வெர்டுன் Verdun மற்றும் அவுன்ஸ்டிக் கார்டிவெலி Ahuntsic-Cartierville பகுதிகளில் இரு தீவிபத்துக்கள் நிகழ்ந்துள்ளன.

செயின்ட் லாவுரன்ட் Saint Laurent பகுதியில் உள்ள Air Canada கட்டிடத்தின் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும், பலத்த காற்று காரணமாக 15 வயது சிறுவன், மீது மரம் வீழ்ந்த காரணத்தினால் அந்த சிறுவன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சூறாவளியின் உச்ச வேளையில், 144,000 இற்கும் மேற்பட்ட மக்கள் மின்சாரமின்றி இருந்தனர்.

மின் சேவையை விரைவாக மீட்டெடுக்க 500 இற்கும் மேற்பட்ட குழுக்கள் பணி ஆற்றிவருகின்றன என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை குறிப்பிட்டுள்ளது.

பாதிப்பு குறைந்த பகுதிகளில் இருந்து மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதற்கான திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.



## ஹேமில்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீற்றர் வேகத்தில் காற்று வீசியதாக கூறப்ப டுகிறது.

இக்காற்று, மரங்களை மற்றும் மின்கம்பிகளை தகர்த்ததன் காரணமாக, சில பகுதிகளில் இன்னும் மின் விநியோகம் சீராகவில்லை.

மேயர் ஹோர்வத் சில நாள்கள் மருத்துவ விடுப்பில் செல்லக்கூடும் என்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

“சமூகத்தின் அன்பும், பராமரிப்பு பாராட்டும் எங்களுக்குப் பெரும் ஆறுதலாக இருக்கின்றன. மேயரின் நிலை குறித்து மேலதிக தகவல்கள் கிடைக்கும் போது தொடர்ந்தும் புதுப்பிப்புகளை வழங்குவோம்,” என அவரது அலுவலகம் தெரிவித்தது.



# வரிகளால் ஒண்டாரியோவில் வேலைவாய்ப்புகளுக்கு பாதிப்பு

ஒண்டாரியோ மாகாணம் இந்த ஆண்டில் பொருளாதார மந்த நிலையை எதிர்கொள்ளக்கூடும் என்று புதிய அறிக்கை எச்சரிக்கின்றது.

இதற்கான முக்கிய காரணமாக அமெரிக்கா விதிக்கும் வரிகள் குறிக்கப்படுகின்றன.

இதன் விளைவாக ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் இழக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஒண்டாரியோ நிதி பொறுப்புக் கூறல் அலுவலகம் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா விதிக்கும் வரிகள் இல்லாத நிலைமையுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, இந்த ஆண்டு மட்டும் 68,100 வேலைவாய்ப்புகள் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டில் இது 119,200 ஆகவும், 2029 இல் 137,900 வேலை வாய்ப்பு இழப்பாகவும் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.




# பார்லிங்டனில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் பலி



கனடாவின் பார்லிங்டன் நகரில் உள்ள ஒரு உணவகத்தின் வாகன தரிப்பு நிலையத்தில் செவ்வாய்க் கிழமை இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஹால்டன் பிராந்திய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பெயார்வி்வ் ஸ்ட்ரீடில் உள்ள உணவகம் அருகே மாலை 8:30 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இருந்த ஒருவர் முதலுதவி அளிக்கப்பட்டு, அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் அவரது உயிரை காப்பாற்ற முடியவில்லை என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு எந்தவிதமான உடனடி அபாயமும் இல்லை எனவும் அவர்கள் உறுதி செய்துள்ளனர். தற்போது எந்த சந்தேக நபர் தொடர்பான தகவல்களும் வெளியிடப்படவில்லை.